அனுப்புனர் :

நெல்லை கோபால் ,
மூத்த பத்திரிகையாளர்,
771/1, சாம்டவர், முனுசாமி சாலை ,
கே.கே.நகர். சென்னை – 600 078.
9994478389



அமைச்சர் சிவசங்கர்




ஆணையர் நடராஜன் ஐ.ஏ.எஸ்.

பெறுநர் :

உயர்திரு. மாண்புமிகுக்கள், அரசு செயலர்கள் அவர்கள்
மற்றும் ஊழல் தடுப்பு இயக்குநர், போக்குவரத்து உயர் அதிகாரிகள் அவர்கள்

பொருள்: போக்குவரத்து துறையில் இருந்து தமிழகமெங்கும் உள்ள அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கும், துறையின் சார்பாக அளிக்கப்படும் பல்வேறு சுற்றறிக்கைகளின் வரிசையில், TOUTS பற்றிய தடை சம்பந்தப்பட்ட சுற்றறிக்கைகள் அவ்வப்போது தொடர் சுற்றறிக்கைகளாக போக்குவரத்து ஆணையர்களால் அனைத்து RTO அதிகாரிகள் மற்றும் உயர் அதிகாரி களுக்கும் அனுப்பப்பட்டு, அறிவுரைகள் வழங்கப்பட்டு வந்தாலும், போக்குவரத்து பணியாளர் ஒன்றிப்பு– ன் சிறப்பு பொதுக்குழுவில் 19.03.2022ல் ''NT–கள் சங்கம்'' என்ற பெயரில் ரகு மற்றும் போலி பொறுப்பாளர் களால் போடப்பட்ட தீர்மானம் 17–ல் , ''திருச்சி கிழக்கு RTO–ல் பணியாளர்கள் ஆரோக்கியமாக பணிபுரிய வெளிநபர்கள் தலையீடு குறித்து நடவடிக்கை எடுக்க DTC – திருச்சி அவர்களை இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது என கூறி தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.'' இது அரசின் சட்டவிதிகளுக்கும் ஆணையரின் உத்தரவுக்கும் புறம்பாக உள்ளதாலும், உரிய நடவடிக்கையினை திருச்சி கிழக்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலர் மற்றும் நேர்முக உதவியாளர் மீதும், மைனாரிட்டி சங்கத்தின் போலி தலைவர் மற்றும் பொறுப்பாளர் கள் ஆகியோர்கள் மீதும், பொதுக்குழு கூட்டி தங்கள் தவறுகளை அவர்களே ஒத்துக் கொண்டிருப்பதால், இவர்கள் அனைவர் மீதும் உரிய ஒழுங்கு நடவடிக்கை எடுக்க கோருவது தொடர்பாக....



போக்குவரத்து துறை

அனுப்புநர்
திரு. S. நடராஜன் இ.ஆ.ப.,
போக்குவரத்து ஆணையர்.
போக்குவரத்து மற்றும் சாலைப் பாதுகாப்பு ஆணையரகம்,
சேப்பாக்கம், சென்னை–05.

பெறுநர்
1. அனைத்து சரக அலுவலர்கள்,
2. அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள்,
3. அனைத்து பகுதி அலுவலக மோட்டார் வாகன ஆய்வாளர்கள்,
4. அனைத்து சோதனைச் சாவடிகள்

11246/RA1/2022 நாள்.13.04.2022

(சுற்றறிக்கை எண்.32/2022)

பொருள்: பொதுப் பணிகள் – போக்குவரத்து துறை அலுவலகங்களுக்குள் இடைத்தரகர்கள், வெளி நபர்கள், ஓட்டுநர் பயிற்சி பள்ளி பணியாளர்கள் – அனுமதிப்பதை தடை செய்தல் – உத்தரவு வழங்குதல் – தொடர்பாக.

பார்வை: போக்குவரத்து துறை, சென்னை அவர்களின் சுற்றறிக்கை எண்கள். 45/91, 35/99, 100/98, 17/2000, 38/2002, 49/2022, 26/2003, 24/2005, 6/2009, 6/2013, 1/2015, 15/2018, 30/2021, 32/2021 மற்றும் 63/2021.

*******

போக்குவரத்து துறை அலுவலகங்களில் இடைத்தரகர்கள் மற்றும் வெளிநபர்களை அனுமதிக்கா வண்ணம் செயலாற்றுமாறு பார்வையில் கண்டுள்ள சுற்றறிக்கைகள் மூலமாக அறிவுரைகள் வழங்கப்பட்டன. இருந்த போதிலும் இச்சுற்றறிக்கைகளை முறையாக பின்பற்றாத காரணத்தினால் போக்குவரத்து ஆணையர் அலுவலகத்திற்கு அதிகப்படியான புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. மேலும், அரசிடமிருந்தும் இப்பொருள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே, இதுகுறித்து பின்வரும் அறிவுரைகள் மீண்டும் வழங்கப்படுகிறது.

1. ஒவ்வொரு அலுவலகத்திலும் பொதுமக்கள் தொடர்பான பணிகளை மேற்கொள்வதற்கு ஏதுவாகவும், அலுவலகங்களுக்கு வரும் பொது மக்களுக்கு உரிய விவரங்கள் வழங்க வேண்டியும் **மக்கள் தொடர்பு அலுவலர்** ஒருவரை நியமிக்க வேண்டும். அவர் அலுவலகத்தின் முன்புறம் அமர்ந்து அலுவலகத்திற்கு வரும் பொது மக்களுக்கு பொறுப்பாகவும், கனிவாகவும், பணிவாகவும் பதில் அளித்து அவர்களுடைய பணிகளை சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மூலமாக விரைவில் முடித்து கொடுக்க ஆவன செய்ய வேண்டும். வட்டாரப் போக்குவரத்து அலுவலர்/நேர்முக உதவியாளர்

**TRANSPORT DEPARTMENT**

From
Thiru.Santosh K Misra,
Transport Commissioner,
Chepauk, Chennai-5.

To
1.All Zonal Officers,
2.All Regional Transport Officers in the State,
3.All Unit Offices,
4.All Check posts.

**R.No. 13673/RA1/2021 Dated: 19.07.2021**
(Circular No: 032/2021)

Sub: Public Service - Transport Department – Allegations against the officer – Allowing of touts and driving school owners and employees – Instructions – Regarding.

Ref: Transport Commissioner's Chennai-05, Circular No.45/1991, 31/1999, 38/2002, 49/2002, 24/2005, 6/2009, 6/2013, 1/2015, 15/2018 and 30/2021.

******

The attention of all Regional Transport Officers, Motor Vehicle Inspectors (NT) in Check post and Motor Vehicles Inspectors in Unit Officers are invited to the circulars and instructions already issued on various occasions, wherein they have already been instructed that the offices should be kept free of touts so that the public visiting offices do not have any difficulty in getting their work done. It has also been instructed that the driving school employees should not be allowed to enter the office. But still many complaints regarding these are being received through the Government and through the Director of Vigilance and Anti-Corruption and also from the public.

Furthermore, it is observed from the reports received from the Vigilance & Anti-Corruption department, that, in various offices private individuals are engaged and they handle official records.

Immediate steps are needed to stop this practice as it tarnishes the image of this department. The practice of engaging private individuals should be stopped forthwith and all unauthorized persons should be kept out of the office. Any unauthorized employment of private individuals in the offices will be viewed very seriously.


In order to ensure transparent administration, all the Zonal Officers are instructed to make surprise checks in the offices under their control and detect such irregularities and initiate strong disciplinary action against

ஆணையரின் நடராஜன் ஐ.ஏ.எஸ்.–ன் சுற்றறிக்கை மற்றும் இதற்கு முன்பிருந்து ஆணையர் சந்தோஷ் கே.மிஸ்ராவின் ஆணை

அய்யா,

மூத்த பத்திரிகையாளரான நெல்லை கோபாலாகிய என் பணிவான வணக்கங்கள்.

கடந்த 13–04–2022–ல் தங்களது சுற்றறிக்கை எண்ணான 32/ 2022–ல், போக்குவரத்து துறை அலுவலகங்களுக்குள் இடைத் தரகர்கள், வெளிநபர்கள், ஒட்டுனர் பயிற்சி பள்ளி பணியாளர்கள் அனுமதிப்பதை தடை செய்தல் உத்தரவாக போக்குவரத்து துறையின் ஆணையரான உங்களால் (நடராஜன் IAS அவர்கள்), அனைத்து சரக



தமிழ்நாடு போக்குவரத்துத்துறை பணியாளர் ஒன்றிப்பு
மாநில மையம் : அரசு அங்கீகாரம் எண் : 82/1970
TAMILNADU TRANSPORT DEPARTMENT STAFF ASSOCIATION
STATE CENTRE : Recognition No. 82/1970

| மாநிலத் தலைவர் | மாநில பொதுச் செயலாளர் | மாநில பொருளாளர் |
| --- | --- | --- |
| சீ. ரகு | ச. முரளிதரன் | மு. செந்தில்குமரன் |
| ✆ : 94435 26547 | ✆ : 75500 64854 | ✆ : 88830 09888 |

சிறப்பு பொதுக்குழு கூட்ட அழைப்பிதழ்

அன்பார்ந்த தோழர்களே!

வணக்கம், நமது ஒன்றிப்பின் சிறப்பு பொதுக்குழு கூட்டம் 19.03.2022 அன்று காலை 11.00 மணியளவில் மதுரையில் சென்னை சில்க்ஸ் எதிர்புறம் உள்ள ஓட்டல் பிரேம் நிவாஸில் நடைபெறுகிறது. அச்சமயம் கீழ்க்கண்ட பொருட்கள் தொடர்பாக உறுப்பினர்களிடையே கருத்துக் கேட்புக்குப் பின் தீர்மானங்கள் நிறைவேற்றப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

1. 28.02.2022 அன்று நடைபெற்ற ஒன்றிப்பின் செயற்குழு நிறைவேற்றிய தீர்மானங்களை அங்கீகரித்தல்.
2. பணியிடமாற்றம் தொடர்பான பிரச்சனைகள்
3. நிலுவையிலுள்ள கோரிக்கையின் தற்போதைய நிலை
4. நமது தலைமை நிலைய கட்டிடத்தை சீரமைத்து பராமரிக்க கமிட்டி ஏற்படுத்துதல்.
5. உறுப்பினர்கள் கொண்டுவரும் இதர தீர்மானங்கள்

மிக முக்கியமான சூழலில் நடைபெறும் பொதுக்குழு என்பதால் பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பித்துத் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தங்கள் தோழமையுள்ள

ச.முரளிதரன்
பொதுச்செயலாளர்

சீ.இரகு
மாநில தலைவர்

பொதுக்குழு நடைபெறும் இடம் :
மதுரையின் சென்னை சில்க்ஸ் எதிர்புறம் உள்ள ஓட்டல் பிரேம் நிவாஸின் கூட்ட அரங்கு பேருந்து நிறுத்தம் மதுரை புகைவண்டி நிலையம்
நாள் : 19.03.2022
நேரம் : காலை 11.00 மணி

சிறப்பு பொதுக்குழு அழைப்பிதழ்





மேடையில் போலிச் சங்க பொறுப்பாளர்கள்

அலுவலர்கள், அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள், அனைத்து பகுதி அலுவலக மோட்டார் வாகன ஆய்வாளர்கள் மற்றும் அனைத்து சோதனைச்சாவடிகளுக்கும் இதுவரை அனுப்பப்பட்ட 99/31, 91/45, 99/35, 98/100, 2000/17, 2002/38, 2022/ 49, 2003/26, 2005/24, 2009/06, 2013/06, 2015/01, 2018/15, 2021/30, 2021/32, 2021/63 இந்த பதினாறு சுற்றறிக்கைகளோடு, பதினெழாவதாக 13.04.2022ல் உங்களது சுற்றறிக்கை எண் 2022/32–ல் மீண்டும் உங்களால் நினைவு கூறப்பட்டு அறிவுரைகளை வழங்கியுள்ளீர்கள்.

கடந்த 19–03–2022–ல் தமிழ்நாடு போக்குவரத்து துறை பணியாளர் ஒன்றிப்பு மைனாரிட்டி நிர்வாகிகளால், மதுரை புகைவண்டி நிலையம் அருகே உள்ள பிரேம்நிவாஸின் கூட்ட அரங்கில், போலி நிர்வாகிகளால் ஒரு கூட்டம் நடத்தப்பட்டு பத்தென்பது தீர்மானங்களை நிறைவேற்றி இருப்பதாக கூறி கூட்டம் கலைந்தது. (பார்க்க: இணைப்பில் உள்ளது)

இதில் பதினெழாவது தீர்மானமாக “வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் திருச்சி (கிழக்கு) அலுவலகத்தில் பணியாளர்கள் ஆரோக்கியமாக பணிபுரியும் வகையில் வெளிநபர்கள் தலையீடு குறித்து நடவடிக்கை எடுக்குமாறு துணைப் போக்குவரத்து ஆணையர் திருச்சி அவர்களை இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது” என்ற கோரிக்கைகளை முன்வைத்துள்ளது. இந்த தீர்மானத்தில் ரகு தலைமையான டீம்–ல் சங்க தேர்தலில் நின்று தோற்றுப்போன போலி பொறுப்பாளரான தேனி RTO PA–வான முரளிதரன் மாநில பொதுச்செயலாளர் தமிழ்நாடு போக்குவரத்துதுறை பணியாளர் ஒன்றிப்பு என பதிவு செய்து தனது முறைகேடுகளை செய்ததோடு,



தமிழ்நாடு போக்குவரத்துத் துறை பணியாளர் ஒன்றிப்பு
மாநில நிர்வாகிகளுக்கான தேர்தல் 2020

தேர்தல் நாள்: 10-10-2020

வாக்கு எண்ணிக்கை நாள்: 18.10.2020

வேட்பாளர்கள் பெற்ற வாக்குகள் விபரம்

| மாநில பொதுச் செயலாளர் (1) பதவி வேட்பாளர் பெயர் | வேட்பாளர் வரிசை எண் | வேட்பாளர் பெற்ற வாக்குகள் |
| --- | --- | --- |
| ஆனந்த கிருஷ்ணன் | 4 | 422 |
| சீ... ராகவன் .தே. | 5 | 154 |
| முரளிதரன். ச. | 6 | 349 |
| செல்லாத வாக்குகள் | | 36 |
| | மொத்தம் | 961 |


வாக்கு மையத்தில் ஆஜரான வேட்பாளர்கள் கையொப்பம்

1. (C. Saravanan)
2. (B. Ananthakrishnan)
3.

(ப.செல்வராஜு)
தலைமை தேர்தல் அலுவலர்.

பெறுநர்:
அறிவிப்பு பலகை

தேர்தலில் தோற்றுப் போன தேனி ஆர்டிஓ பி.ஏ. முரளிதரனின் சான்றிதழ்



தீர்மானம் - 19

வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், பகுதி அலுவலகம் மற்றும் சோதனை சாவடிகளில் பணிபுரிந்துவரும் பணியாளர்களை பொய்செய்தி வெளியிடுவதாக மிரட்டும் போலி பத்திரிக்கையாளர்களின்மீது கடும்நடவடிக்கை எடுக்குமாறு, இயக்குநர், காவல்துறை, சென்னை அவர்களை இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

இப்படிக்கு,

(ச.முரளிதரன்)
மாநில பொதுச்செயலாளர்,
தமிழ்நாடு போக்குவரத்துத்துறை பணியாளர் ஒன்றிப்பு,
14 / 1, தேரடி தெரு, சென்னை -5.

பெறுநர் :

1. மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், தமிழக முதலமைச்சர், தலைமைச்செயலகம், புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-9.
2. திருமிகு. இறையன்பு அவர்கள், தலைமைச்செயலாளர், தலைமைச்செயலகம், புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-9.
3. திருமிகு. உள்துறை செயலாளர் அவர்கள், தலைமைச்செயலகம், புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-9.
4. திருமிகு. போக்குவரத்து ஆணையர் அவர்கள், சென்னை-600 005.
5. திருமிகு இணைப்போக்குவரத்து ஆணையர் அவர்கள், சென்னை-600 005.
6. திருமிகு. துணைப்போக்குவரத்து ஆணையர் அவர்கள், திருச்சி.

ஊழலை விமர்சிக்கும் பத்திரிகையாளர்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து போலி பத்திரிகையாளர்கள் என்று கூறி 19வது தீர்மானத்தில் முறைகேடாக பதிவு செய்யப்பட்ட போலி சங்க பொறுப்பாளர்களின் தீர்மானத்தில் போலி நிர்வாகி முரளிதரன் கையொப்பமிட்ட பதிவு



திருச்சி கிழக்கு ஆர்.டி.ஓ. பி.ஏ. பழனியப்பன்



போலி பொறுப்பாளர்கள் சங்கக் கூட்டத்தில் கலந்து கொண்ட பணியாளர்கள் ரகுவின் ஆதரவாளர்கள்


அதிகாரப்பூர்வமாக, தனது கையெழுத்தையும் அந்த தீர்மான பதிவேட்டுகளில் கையெப்பம் செய்திருப்பதால் சங்க பைலா–வின்படி தவறு என்பதால் உரிய விசாரணை செய்து கடும் நடவடிக்கைகளை எடுக்க பணிந்து கோருகிறேன். தேர்தலில் நின்று தோற்றுப்போன ஒருவரை ஒரு மைனாரிட்டி தலைவரான ரகு தன்னிச்சையாக எப்படி பொதுச்செயலாளர் என அறிவிக்க முடியும்? அவர் எப்படி சங்க லெட்டர் பேடில் அதிகாரபூர்வமாக கையொப்பமிட முடியும்?

ரகு – தலைமையிலான போலி சங்க நிர்வாகிகளால் இந்த தீர்மானங்களை படிக்கின்றபோது, கூட்டத்தில் முதல் வரிசையில் முதல் இடத்தில் தான் திருச்சி கிழக்கு RTO –வின் நேர்முக உதவியாளர் பழனியப்பன் அமர்ந்துள்ளார். அவரின் அனுமதியோடு தான் மேற்கண்ட 17–வது தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த தீர்மானத்தின் குறிப்புகளை உறுப்பினர்களின் கருத்து கேட்பிற்கு பின் தான் தீர்மானங்கள் நிறைவேற்றப்படும் என போலி பொறுப்பாளர்களான முரளி மற்றும் ரகு கையெப்பம் இட்டு தீர்மானங்களை கேட்டுத்தான் சபையில் அறிவித்துள்ளார்கள் என்பதும் அவர்களது தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (பார்க்க: புகைப்படம்+தீர்மானத்தின் நகல்)

இப்படி, RTO அலுவலகத்தில் புரோக்கர்கள் மற்றும் இடைத்தரகர்கள், வெளிநபர்கள் வருவதை தடுப்பது என்பது அந்த அலுவலகத்தின் RTO – மற்றும் அவரது நேர்முக உதவியாளரின் பணிகள்தான் என்பது ஆணையர்களின் உத்தரவுகளில் ஒன்றானது தான். அதே நேரத்தில் அலுவலக ஆய்வுக்காக வரும் உயர்அதிகாரிகளான மண்டல அதிகாரிகள் வரும்பட்சத்தில் அலுவலகத்திற்குள் வெளிநபர்கள் இருப்பது தெரிய வந்தால், அந்த அலுவலகத்தின் RTO – மற்றும் நேர்முக உதவியாளரைத்தான் எச்சரிக்க முடியும், அல்லது அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கையினையும் DTCயால் எடுக்க முடியும்.

அதற்காக சங்கம் என்ற பெயரில் இவர்கள் சுயநினைவின்றி கோரப்படும் தீர்மானங்களுக்கு DTCயை வந்து, கிழக்கு RTO அலுவலக அலுவலக வாசலில் நின்று கையில் குச்சியை வைத்துக்கொண்டு security வேலைகளையா செய்ய சொல்ல முடியும் ?

திருச்சி கிழக்கு RTO – மற்றும் நேர்முக உதவியாளர்களால், தங்கள் அலுவலகத்திற்குள் நுழையும் வெளிநபர்களை தடுக்க முடியாததை DTC வந்து நடவடிக்கை எடுக்க வலியுறுத்துவது என்பது ஒரு முட்டாள்தனமான தீர்மானம் அல்லவா ?


தீர்மானம் - 17


வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், திருச்சி (கிழக்கு) அலுவலகத்தில் பணியாளர்கள் ஆரோக்கியமாக பணிபுரியும்வகையில் வெளிநபர்கள் தலையீடு குறித்து நடவடிக்கை எடுக்குமாறு துணைப்போக்குவரத்து ஆணையர், திருச்சி அவர்களை இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

தீர்மானம் 17ல் திருச்சி கிழக்கு ஆர்.டி.ஓ. அலுவலகத்தின் முறைகேடுகளை ஒப்புக்கொள்ளும் வகையில் இவர்களே அறிவிப்பு செய்த தீர்மானம்

ஒருவேளை ஏதோ ஒரு அசம்பாவிதம் ஏற்பட்டால், ஒட்டுமொத்த அலுவலகமே DTC மீது பழியை போட்டு விட்டு, நாங்கள் அன்றே எங்கள் சங்கத்தின் மூலம் தீர்மானம் போட்டு, DTC கவனத்திற்கு கொண்டு சென்றோம். உரிய நடவடிக்கை DTCயால், எடுக்கப்படாதற்கு நாங்கள் எப்படி பொறுப்பேற்க முடியும் என கூறி, சங்கத்தின் மூலமாகஅதிகாரிகளை மிரட்டுவதற்காகத்தானே இந்த விதி மீறலான தீர்மானங்களை இவர்கள் நிறைவேற்றுகிறார்ககள் என்றே பட்டவர்த்தனமாக தெரிகிறது.

அதே நேரத்தில் வெளிநபர்கள் மற்றும் புரோக்கர்கள், ஒட்டுனர் பயிற்சி பள்ளி நிர்வாகிகள், இடைத்தரகர்கள் நுழைவதை, அலுவலக அதிகாரிகளான RTO மற்றும் PA–க்களால் ஏன் தடுக்க முடியவில்லை என நாம் விசராணைக்கு இறங்கும்பட்சத்தில் ''இந்த அதிகாரிகள் பெறும் கையூட்டு காரணமாகவே,அவர்கள் தங்கள் அலுவலகத்திற்குள் நுழைவதையும், அங்குள்ள ஆவணங்களை புரோக்கர்கள் வெளியே எடுத்துச் செல்வதையும் இவர்களால் தடுக்க இயலாமல் போகிறது'' என்பது தெரியவந்தது.

எனவே, இப்படியொரு தீர்மானத்தை முட்டாள்தனமாக இவர்களே பதிவு செய்து, உண்மையை கூறி ஒத்துக்கொண்டதால், இந்த 17 வது தீர்மானத்திற்கான உரிய விளக்கத்திற்கான விடை கிடைத்தாலும், இவர்கள் மீது உரிய விசாரணை செய்து RTO – மற்றும் அவரது PA பழனியப்பன் மீதும் ஒழுங்கு நடவடிக்கைகள் மண்டல அதிகாரியால் எடுக்கப்பட வேண்டும்.



தீர்மானம் - 19

வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், பகுதிஅலுவலகம் மற்றும் சோதனை சாவடிகளில் பணிபுரிந்துவரும் பணியாளர்களை பொய்செய்தி வெளியிடுவதாக மிரட்டும் போலி பத்திரிக்கையாளர்களின்மீது கடும்நடவடிக்கை எடுக்குமாறு, இயக்குநர், காவல்துறை, சென்னை அவர்களை இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

ஊழலை விமர்சிக்கும் பத்திரிகையாளர்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து போலி பத்திரிகையாளர்கள் என்று கூறி 19வது தீர்மானம்

மேலும் எங்கள் அலுவலகத்திற்குள் வெளிநபர்கள் தலையீடுகள் இருப்பதால் ஆரோக்கியமாக பணிபுரியும் வகையில் நடவடிக்கை எடுக்க DTC – திருச்சிக்கு தீர்மானம் போட்டு நிறைவேற்றப்பட்டிருப்பதும், எங்களது சங்கத்தின் ஆதரவாளரான பணியாளர்களுக்கும், அதிகாரிகளுக்கும் மெமோவை வழங்குங்கள் என கேட்டு வாங்கும் இந்த போலி சங்க பொறுப்பாளர்களின் நடவடிக்கைகள் முட்டாள்தனமாக இருந்தாலும், விநோதமான வேடிக்கையாகவும்தான் உள்ளது.

எனவே, திருச்சி கிழக்கு RTO–க்கும் மற்றும் அவரது நேர்முக உதவியாளர் மற்றும் போலி சங்க உறுப்பினர்கள் மீதும் போக்குவரத்து ஆணையர் உரிய நடவடிக்கை எடுத்தால் சரி. அது மட்டுமல்லாது கடைசி தீர்மானமாக பத்தொன்பதில், வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், பகுதி அலுவலகம், மற்றும் சோதனை சாவடிகளில் பணிபுரிந்து வரும் பணியாளர்களை பொய் செய்தி வெளியிடுவதாக மிரட்டும் போலி பத்திரிகையாளர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்குமாறு இயக்குனர் காவல்துறை சென்னை அவர்களை இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது என்ற ஒரு தீர்மானத்தையும் இந்த மைனாரிட்டி போலி சங்க பொறுப்பாளர்களால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஒருவர் பொய் செய்தி வெளியிடுவதாக மிரட்டும் போலி பத்திரிகையாளர் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இவர்களால் கோரப்படுகிற போது அந்த தீர்மானமே தவறாக உள்ளது என்பதை தெளிவாக புரியவைக்கிறது.

பத்திரிகையாளர்களில் ‘போலி’ என கூறப்டுவதே ஒரு தவறான வார்த்தையாகும், அதேநேரத்தில் இருந்தாலும், அப்படி போலியாக சுற்றுகிறவர்கள் எங்காவது ஒரு இடத்தில் இருக்கலாம் என வைத்துக் கொண்டாலும் எங்கும் நிறைந்தவர்களாக இருக்க வாய்ப்புகள் இல்லை என்பதுதான் உண்மை. மேலும், போலி என கூறப்படும் நபர்கள் எவராக இருந்தாலும் சரி, எந்த ஒரு பத்திரிகையிலும் இதுவரை பணியாற்றிய அனுபவங்கள் இல்லாமலும், பத்திரிகையாளர்களின் தொடர்புகளே அறவே இல்லாதவர்களாகத்தான் இருப்பார்கள்.



ஊழலை வெளியுலகுக்கு கொண்டு வருவோரை

# போலீசார் தொந்தரவு செய்யக்கூடாது

## ஐகோர்ட் உத்தரவு

சென்னை, ஜூலை 27: ஊழலை வெளி உலகுக்கு கொண்டு வருபவர்கள் மீது வழக்கு பதிவு செய்து போலீசார் தொந்தரவு செய்யக்கூடாது என்று சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அதிமுக ஆட்சியில் ஊழல் குற்றச்சாட்டுகளை பத்திரிகையில் வெளியிட்டது தொடர்பான வழக்கை ரத்து செய்யக் கோரிய மனு மீது சென்னை உயர் நீதிமன்றம் அளித்த உத்தரவு வருமாறு:

சட்டத்தைநிலைநாட்டும் போலீசார் குடிமக்களை பாதுகாக்க வேண்டும். குறிப்பாக அதிகாரத்தை பயன்படுத்தி ஊழல் செய்வோரை விட அந்த ஊழலை வெளிச்சத்துக்கு கொண்டு வருவோரை பாதுகாக்க வேண்டும். அதற்கு மாறாக ஊழலை வெளிச்சத்துக்கு கொண்டு வருவோர் மீது வழக்கு மேல் வழக்கு போட்டு அவர்களை கொடுமை செய்யக்கூடாது.

ஏராளமான ஆதாரங்களுடன் கொடுக்கப்படும் புகார்கள் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்வது இல்லை. ஆனால், ஊழலை வெளி உலகுக்கு தெரியப்படுத்துபவர்கள் மீதே வழக்குகளை போலீசார் பதிவு செய்கிறார்கள்.

போலீசாரை தங்களது பாதுகாவலர்கள் என்று பொதுமக்கள் நினைக்கின்றனர். அதற்கு மாறாக போலீசார், செயல்படக்கூடாது. வேலியே பயிரை மேய அனுமதித்தால் சமுதாயத்தில் அராஜகம் அதிகரித்து விடும். சட்டத்தின் ஆட்சி நடைபெறாது.

ஊழல் செய்தவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்காமல் அதை வெளியுலகத்துக்கு கொண்டு வருபவர்கள் மீது வழக்குப்பதிவு செய்து தொந்தரவு செய்யக்கூடாது. இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறாமல் தடுக்க போலீஸ் அதிகாரிகளை உயர் அதிகாரிகள் கண்காணிக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

ஊழலை வெளிக்கொண்டு வரும் பத்திரிகையாளர்களை போலீசார் தொந்தரவு செய்யக்கூடாது என உயர்நீதிமன்ற உத்தரவு

அப்படிப்பட்ட நபர்களை வேண்டுமானால் போலி என அழைப்பதிலோ, கூறப்படுவதிலோ தவறில்லை. அதே போல் போலி என உங்களால் கூறப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்படுகிறபோது, அந்த போலியை பற்றி அனைத்தும் அறிந்தவர்களாகத்தானே நீங்களும் இருக்க முடியும்.

எனவே பொய் செய்தியோ, அல்லது உண்மை செய்தியோ அதனை வெளியிடுவதற்கு அந்த பத்திரிகையாளருக்கு சொந்தமாக ஒரு பத்திரிகை வேண்டும். அல்லது ஏதாவது ஒரு பத்திரிகையில் அவர் நிருபராக பணியாற்ற வேண்டும். அல்லது பல்வேறு பத்திரிக்கைகளுக்கும் அவர் செய்தி கொடுப்பதாக இருக்க வேண்டும் அல்லது அப்படியொரு தொடர்பில் இருக்கக்கூடிய (Freelancer) நபராகவும் இருக்கலாம். அப்படியிருக்கையில் நீங்கள் எப்படி அவரை போலி என கூற முடியும்?

அதேபோல், நீங்கள் போலி என்று அறிகிற அந்த பத்திரிகையாளரை அவரால் கூறப்படும் அந்த பத்திரிகையின் பெயரை அறிந்து உங்கள் புகாரை அந்த பத்திரிகை அலுவலக அதிகாரிகளிடம் தெரிவியுங்கள். அவரது செய்திகளை அந்த பத்திரிகை நிறுவனம் பொய் என்று அறிந்த பிறகு, எப்படி பிரசுரம் செய்வார். அதே நேரத்தில் பத்திரிகையாளர் என கூறும் அவரால், அதாவது உங்களால் போலி



மைனாரிட்டி சங்கத்தின் தலைவர் எனக்கூறிக் கொள்ளும் ரகு



சங்கத் தேர்தலில் தோற்றுப் போன போலி பொறுப்பாளராக இருக்கும் தேனி ஆர்.டி.ஓ. பி.ஏ. முரளிதரன்



மைனாரிட்டி சங்கத்தின் மாநிலத் துணைத் தலைவர் எனக்கூறிக் கொள்ளும் ராஜசுலோசனா

பத்திரிகையாளர் என கூறப்படும் நபர் உங்களை எப்படியெல்லாம் மிரட்டினார் என்பதை ஆதாரப்பூர்வமாக புகாராக எழுதி உங்களிடம் உள்ள ஆடியோ ஆதாரங்களோடு சம்பந்தப்பட்ட காவல் நிலையத்தில் புகார் பதிவு செய்யுங்கள். அந்த பத்திரிகையாளர் மீது உரிய வழக்கு பதியுங்கள்.

அதே நேரத்தில் எந்தவித ஆதாரங்களும் இல்லாமல், உங்களது புகாரே பொய் புகாராக இருந்தால், வழக்கு அப்படியே உங்கள் மீது திரும்பிவிடும். உங்கள் மீதும் FIR விழும். நீங்களும் சிறைக்குள் செல்வதோடு, அரசுபணியினையும் இழப்பீர்கள்.

ஆதலால் பொய் புகார் கொடுப்பதற்கு முன், பலமுறை யோசித்து புகாரை அளியுங்கள். உங்களது ஊழல்களை வெளிக்கொண்டுவரும் ஊடகக்காரர்களை மிரட்டுவதற்கு இப்படியொரு பொய்யான புகார்களை கொடுத்து முடக்குவது மட்டும்தான் உங்களுக்கு தெரிந்த ஒரே வழி என்பதால் அதனையும் மிகுந்த எச்சரிக்கையோடு பதிவு செய்யுங்கள். எப்படிப் பார்த்தாலும் சரி, ஊழல்களைச் செய்து சம்பாத்தியம் செய்து வரும் உங்களாலே மிரட்டல்களை விடும் பட்சத்தில் உங்களுக்கெதிராக எந்தவிதத்திலும் குறைவில்லாமலே களம் காண அந்த அதிரடி பத்திரிகையாளர்கள் தயாராக இருப்பார்கள் என்பதை மட்டும் நினைவில் கொள்ளுங்கள்.

மேலும், மக்கள் வரிப்பணத்தில் சம்பளம் மற்றும் கிம்பளம் வாங்கும் நீங்கள், கொளுத்த லஞ்சத்தில் மிதந்து கோடிகோடியாய் சுருட்டியும், ஆடம்பர வாழ்க்கையும், சொகுசான சொந்த கட்டிடத்தில் வாழ்ந்தும், மருமகன், மருமகள்களுக்கு ஆடம்பர கார்களை அன்பளிப்பாக வழங்கியும், அளவுக்கு அதிகமான பணத்தால் மஞ்சம் குளித்து வரும் நீங்கள், முதலில் உங்களை உணர்ந்து செயல்படுங்கள்.

மேலும் உங்கள் அலுவலகத்திற்கு இலவசமாய் வரும் பத்திரிகைகள், மொத்தம் எத்தனை என்று என்றைக்காவது எண்ணிப்பார்த்தீர்களா ? அவை எல்லாம் கடைகளில் சென்று காசு கொடுத்து தான் வாங்கி படித்தமோ என்பதை உங்களுக்குள்ளே கேட்டு பாருங்கள்.அதன் பின் உண்மையை உணர்ந்து தீர்மானத்தை போடுங்கள். அதனை நிறைவேற்றுங்கள்.

உங்கள் டேபிள்களின் மீது எத்தனை கூட்ட ஏற்பாடுகளுக்கான விளம்பர நோட்டீஸ்கள் மற்றும் பலவிதமான அழைப்பிதழ்கள், பத்திரிகைகள், கலர், கலரான விசிட்டிங் கார்டுகள், பல பெரிய தனக்காரர்களின் கட்டிங்கள், லெட்டர் பேடு கட்சிகளின் அழைப்பிதழ் நோட்டீஸ்கள், கோவில் கொடை நிதிகளின் ரசீதுகள் மற்றும் பல தரப்பட்ட நன்கொடைகளின் ரசீதுகள், நடுத்தர கட்சி நிர்வாகிகள், அந்த பகுதியின் குறுநில மன்னர்களுக்கு வழங்கும் அன்பளிப்புக்கான கவர்கள், லெட்டர் பேடு சமூக நலன்களின் ஒருங்கிணைப்பாளர்களுக்கு வழங்கும் அன்பளிப்புகள் மற்றும் மிக முக்கிய மாவட்ட உயரதிகாரிகளுக்கும் தலைமை நகரமான சென்னையிலிருந்து வரும் பல்வேறு துறை அதிகாரிகளுக்கும் மாவட்ட தலைமை அதிகாரியின் PC–க்களுக்கும் செய்யும் சிறப்புகளையும் அனைத்துப் பத்திரிகை யாளர்களும் மற்றும் உயர் அரசு அதிகாரிகளும் எல்லா அரசியல்வாதிகளும் அறிவார்கள் என்பதையும் நினைவில் கொள்ளுங்கள். இப்படி வரிசையாக எத்தனையோ செய்திகளை அடுக்கி கொண்டே போகும் அளவுக்கு வந்தோர்களுக்கு எல்லாம் வாரி கொடுக்கிறீர்களே அவைகள் எல்லாம் உங்கள் சம்பளத்தில் இருந்தா கொடுக்கிறீர்கள், அன்றாடம் லட்ச லட்சமாக வாங்கி குவிக்கும் லஞ்ச லாவண்யங்களில்,

ஒரு மிகச் சிறிய செலவை செய்து விட்டு, உங்களது குறைகள் வெளியில் தெரியாமல் மறைப்பதற்கும், சமூக நல போராட்டக்காரர்கள் உங்களது லஞ்ச லாவண்ய நிலைகளை சொல்லி போராடி விடக்கூடாது என்பதற்காகத்தானே வந்தவர்கள் வாயை அடைக்க நீங்கள் வாங்கிய லஞ்சப் பணத்தை வருவோர்க்கு அள்ளிவிடுகிறீர்கள். இத்தனையும் நீங்கள் செய்துவிட்டு பத்திரிகையாளர்களை குறை கூறும் அளவிற்கும் 'போலி' என்ற சொற்களை வீசியும் உங்கள் நிலைகளை உயர்த்திக் கொள்வது, உங்களைக் குனிய வைத்துவிடும் என்பதை மறந்து விடாதீர்கள். ஏனென்றால், இந்த விஷயங்கள் அனைத்தும் நீதிமன்றம் வரை பகிரப்படுவதோடு ஒரு வாதமாகவே கூட அமைந்து உங்களையும் சேர்த்தே சிறைக்குள் இழுக்கும் என்ற நிலைகளைத்தான் வகுக்கும் என்பதையும் மறந்து விடாதீர்கள்.

அதேபோல், இந்த விஷயம் அனைத்து அரசு அதிகாரிகள் மற்றும் காவல் அதிகாரிகள் என பல துறைகளை சேர்ந்த விபரமானவர்கள் அனைவரும் அறிந்தாலும்கூட ஏதோ காலத்திற்கேற்ப சற்று கண்டுகொள்ளாமல் உள்ளனர் என்பதுதான் உண்மை. ஏதோ நீங்கள் மகா யோக்கிய சிகாமணிபோல் பத்திரிகையாளர்களை மிரட்டி பார்ப்பதும், அவர்களுக்கு எதிராக தீர்மானம் போடுவதும் போன்ற செயல்களை செய்து உங்கள் மீது நீங்களே சேற்றை வாரி பூசிக்கொள்ளாதீர்கள். பத்திரிகையாளர்கள் ஒரு கட்டத்திற்குமேல் எதற்கும் துணிந்தவர்கள்தானே தவிர, உங்களது மிரட்டல்களுக்கு எல்லாம் என்றுமே பயந்தவர்களாக இருப்பதில்லை என்பதுதான் நாம் அறிந்த ஒன்று. எனவே, எல்லோருக்கும் எல்லாம் உண்டு என்பதை உணருங்கள்.


ஆகவே, எல்லா பத்திரிகையாளர்களும் கரெப்ஷன்காரர்கள் அல்ல... அதே நேரத்தில் செய்த விளம்பரத்திற்கு உரிய தொகையை பெற்றுவிட்டு நியாயமாக செல்கிறவர்களும் உண்டு. எனவே, யாரும் யாரையும் மிரட்டுவதற்கில்லை என்பதுதான் உண்மை. எனவே, எதற்கும் துணிந்த ஊடகக்காரர்களும் இந்த சமூகத்தில் உண்டு என்பதை அறிந்து கொண்டு உங்களது ஊழல்களை முதலில் ஒழியுங்கள். உங்கள் தவறை உணர்ந்து திருந்துங்கள்.

அதன் பின் பத்திரிகையாளரை குறை சொல்லவோ, பொய்புகாரை அளிக்கவோ முன்வாருங்கள். நல்ல, திறமையான பத்திரிகையாளர்கள் எவரும் எக்காலத்திலும் பயப்படாமல், உண்மையை ஊருக்கு முந்தி சொல்வார்கள் என்பதை மனதில் நிறுத்தி கொள்ளுங்கள் அதே போல் நீங்கள் கண்ணாடி கூண்டில் நின்றுகொண்டு கல்லெறிவதை பற்றி யோசியுங்கள்.

மீண்டும் ஒருமுறை கூறிக்கொள்கிறோம், பத்திரிகையாளர்கள் எவரையும் குறை சொல்லாதீர்கள். எல்லோருக்கும் எல்லாம் உண்டு என்பதை நினைவில் வைத்து தேவையானவற்றை மட்டும் சபையில் பேசி தீர்மானங்களை உரக்க சொல்லுங்கள். உங்கள் தலைமையை நம்பி வரும் பணியாளர்களுக்கு நல்லதை செய்யுங்கள். நம்பிக்கை துரோகத்தை விதைக்காதீர்கள். அவர்களையும் வாழவிடுங்கள். உங்கள் சுய நல லஞ்ச கமிஷனிற்காக யாரையும் 'பலி' கொள்ளாதீர்கள். ஒருநாள் எல்லாமே உங்களுக்கு எதிராக திரும்பும் என்பதை நினைவில் நிறுத்தி வைத்து ஊடககாரர்களின் எதிர்ப்பை சம்பாதித்துக் கொள்ளதீர்கள் அன்று உங்களை காப்பாற்ற யாரும் இல்லாமல், எல்லாவற்றையும் இழந்து நடுரோட்டில் நிற்பீர்கள். அதுவே உங்கள் 'கர்மா'வாக தொடரும்.

ஆக, இப்படி சங்கம் என்ற பெயரில், போலி நிர்வாகிகளோடு, பல்வேறு பணியாளர்களையும் மூலைச்சலவை செய்து அரசுக்கும், உயர் அதிகாரிகளுக்கும், பத்திரிகையாளர்களுக்கும் எதிராகவும் செயல்படும் ரகு மற்றும் முரளி, சங்கரன்கோவில் RTO –ல் பணி செய்யும் டைப்பிஸ்ட் வெள்ளைச்சாமி ஆகியோரின் முட்டாள்தனமான செயல்பாடுகளுக்கு துறை சார்ந்த அதிகாரிகள் தான் இவர்களுக்குரிய தண்டனைகளை வழங்கியும், எச்சரிக்கை செய்தும், கண்டனங்களை பதிவு செய்தும் அறிவுரைகளை எடுத்துரைக்க வேண்டும்.

பணிவன்புடன்



நெல்லை கோபால்

மூத்த பத்திரிகையாளர்

20.04.2022

9994478389